**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**

**CC.No.410/2022**

**PW - 7**

| | | |
|---|---|---|
| Name | : | லட்சுமணன் ( LW. 4 ) |
| Father's / Husband Name | : | த/பெ.குப்பண்ணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.06.2024 என்னால்** சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு. துரைகருணாநிதி, உதவியாளர்.

**(எதிரிகள் ஆஜர். இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களும் ஆஜர்.)**

**(விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம். :– மதியம் 12.13 மணி )**

**முதல் விசாரணை (அரசு தரப்பில்) :–**

1) நான் நாமக்கல் மாவட்டம், சிலுவம்பட்டி அஞ்சல், செங்கோடயன் பாளையத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் தெரியாது கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு ஊரில் கோவில் திருவிழா நடைபெற்றது. அப்பொழுது மாலையில் சாமியின் ஊர்வலம் நடைபெற்றது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். காளியண்ணன் மகன் பழனிச்சாமிக்கும் எதிரிகளுக்கும் சம்பவத்தன்று பிரச்சனை நடந்தது, பழனிச்சாமியும், அவரது மகன் ஆகியோர்கள் வீட்டில் இருந்து காரில் வந்தபொழுது ரோட்டில் ஏறும்போது எதிரிகளுடன் பிரச்சனை நடந்தது. பிரச்சனை நடந்தது உண்மைதான். யார் யாரை அடித்துக் கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. நான் போவதற்குள் பிரச்சனை முடிந்துவிட்டது. இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

2) போலிசார் என்னை விசாரணை செய்தபோது நான் மேலே சொன்ன சங்கதிகள்தான் சொன்னேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் புகார்தாரர் கோழிப்பண்ணை வைத்து தொழில் செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான்.

**மறு விசாரணை – இல்லை.**

**விசாரணை முடிவுற்ற நேரம்:– மதியம் 01.05 மணி )**